**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**

**ஒ.எஸ்.61/2019**

**2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 03-ம் நாள் திங்கள்கிழமை**

**வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1)ன் படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **சீனிவாசன்** | **சாதி** | : | |
| **த.பெ** | : | | **சமயம்** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | **வயது** | : | |

**வா.சா. 1 சீனிவாசன் ஆஜர்**

<u>31வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

தாவா வழக்கில் 31வது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் கண்ட வழக்கு விவரங்களை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. இண்டர்ஸ் டவர் லிமிடண்ட் சர்வே எண். 54/11-ல் அமைக்கப்பட்டுள்ளது. இது என்னுடைய பிராதில் 5 இலக்க சொத்தாக காண்பித்திருக்கிறேன். என்னுடைய பிராதில் சர்வே எண். 54/11 என்பது 5வது இலக்க சொத்தாக காண்பித்திருக்கிறேன். டவர் வாடகை முருகன் என்பவர் வாங்குகிறார். தாவா சொத்தில் முருகன் என்பவருக்கும் பங்கு உரிமை உண்டு என்றால் சரிதான். தாவா சொத்தில் முருகன் என்பவருக்கு சொந்தமான இடத்தில் தான் டவர் அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 31வது பிரதிவாதி சரியான பாக உரிமையாளரிடம் இருந்த பதிவு பத்திரம் ஏறபடுத்திக் கொண்டு டவர் அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. 31வது பிரதிவாதி தாவா 5வது இலக்க சொத்தில் டவர்

அமைத்துள்ளதை தடை செய்வதற்கு தங்களுக்கு சட்டப்படியான உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா 5வது இலக்க சொத்தில் டவர் அமைத்துள்ளதற்கு மின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலை ஆட்கள் சென்று வருவதை நீங்கள் தடை செய்ய உங்களுக்கு எந்த விதமான சட்டப்படியான உரிமை இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

District Munsif,
Manamadurai.